**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு**

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு

2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண்.156/2025
CNR No.TNTJ15-000171-2025

துர்காதேவி வாதி

/எதிராக/

1. வட்டாட்சியர், பாபநாசம்
2. மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர். பிரதிவாதிகள்

வழக்கறிஞர்கள் முன்னிலை

வாதிக்காக : திரு.ப.சின்னமணி

பிரதிவாதிகளுக்காக : அரசு வழக்கறிஞர்

**தீர்ப்புரை**

இறந்துபோன புஷ்பவள்ளி என்பவருக்கு வாதி வாரிசு என்று விளம்புகை செய்யக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **வழக்குரை சுருக்கம்:**

1.1) வாதியின் தாயார் புஷ்பவள்ளிக்கு வாரிசு சான்று வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புஷ்பவள்ளி, கண்ணன் ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள். மேற்படி புஷ்பவள்ளி–சாந்தாராமன் ஆகியோர்களுக்கு திருமணம் நடைபெற்று குழந்தை இல்லாததால் புஷ்பவள்ளியின் சகோதரர் கண்ணன்–வேணி அவர்களின் கடைசி குழந்தையான வாதியை கடந்த 13.09.1999 அன்ற தத்தெடுத்து மகளாக



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.29 10:26:36 +0530

வளர்த்து வந்து வாதிக்கு கடந்த 28.08.2020-ம் திருமணம் செய்து வைத்துள்ளார்கள். அதன்பிறகு வாதியின் தாயார் புஷ்பவள்ளி கடந்த 19.01.2025 அன்றும் வாதியின் தந்தை சாந்தாராமன் 10.09.2012 அன்றும் பசுபதிகோவிலில் இறந்துவிட்டனர். மேற்படி இறந்துபோன புஷ்பவள்ளிக்கு வாதியை தவிர வேறு சட்டப்படியான வாரிசு எவரும் கிடையாது.

1.2) மேற்படி புஷ்பவள்ளி பெயரில் உள்ள சொத்துக்களை பெயர் மாற்றம் செய்வதற்கு வாரிசு சான்று தேவைப்பட்டதால் வாதி கடந்த 22.02.2025 அன்று 1-ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கேட்டு தாக்கல் செய்த மனுவை இறந்துபோன புஷ்பவள்ளிக்கு நேரடி வாரிசு இல்லை என்று கூறி நிராகரித்துவிட்டார். எனவே இறந்துபோன புஷ்பவள்ளிக்கு வாதிதான் வாரிசு என்று விளம்புகை செய்யக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) 1-ம் பிரதிவாதியால் தாக்கல் 2-ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரை சுருக்கம்:**

வழக்குரையில் வாதி கூறியுள்ள சங்கதிகளை தகுந்த ஆவணங்களுடன் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். இறந்துபோன புஷ்பவள்ளிக்கு வாதி நேரடி வாரிசு இல்லை என்பதால் வாரிசு சான்று வழங்கப்படவில்லை எனவே வாதியின் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஆகும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதுரைகள் பார்வையிடப்பட்டு கீழ்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளது.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.29 10:26:56 +0530

<u>**எழு வினாக்கள்**</u>:

1. Whether the plaintiff prove that she is adopted child for Santharaman-Pushpavally couples?
2. Whether the plaintiff is entitled to the relief of Declaration as prayed?
3. What other relief for the plaintiff?

4) <u>**சாட்சியங்கள்:**</u>

வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது வா.சா.1 முதல்விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு 3ம் நபரான திரு.கண்ணன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

6) <u>**எழு வினாக்கள் 1, 2 மற்றும் 3:**</u>

6.1) இறந்து போன புஷ்பவள்ளி என்பவர் வாதியின் இயற்கையான தாய் அல்ல, வாதியின் அத்தை என்பது வழக்காவணங்களை பரிசீலனை செய்யும்போது தெரிய வருகிறது. வாதியின் தகப்பனாரான (வா.சா.2) கண்ணன் என்பவரின் உடன் பிறந்த சகோதரிதான் மேற்படி புஷ்பவள்ளி ஆவார். மேற்படி புஷ்பவள்ளி பெயரில் உள்ள சொத்துக்களை அடைவதற்காக வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். எனினும் ஓர் நபர் தத்தெடுக்கப்பட்டு மகனாகவோ, மகளாகவோ வளர்க்கப்பட்டால் இயற்கை வழியில் பிறந்த மகனுக்கும், மகளுக்கும் உள்ள அனைத்து



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.29 10:27:05 +0530

உரிமைகளும் தத்தெடுக்கப்பட்டவருக்கும் உள்ளது. தத்தெடுக்கப்பட்ட நபரும் சட்டப்படியான வாரிசாகதான் கருதப்படுவார்.

6.2) வாதியை சாந்தாராமன் – புஷ்பவள்ளி தம்பதியினர் கடந்த 13.09.1999 அன்று தத்தெடுத்துக் கொண்டதன் அடிப்படையில் வாதியை மேற்படி புஷ்பவள்ளியின் வாரிசு என்று விளம்புகை செய்ய கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 13.09.1999 அன்று சாந்தாராமன் – புஷ்பவள்ளி தம்பதியினர் கண்ணன் – வேணி தம்பதியினருக்கு பிறந்த வாதி துர்காதேவியை தத்தெடுத்து கொண்டார்கள் என்பதை தத்து எடுப்பு பத்திரம் (வா.சா.ஆ.1) மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

6.3) மேற்படி தத்து கொடுத்த கண்ணன் இவ்வழக்கில் வா.சா.2–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 சாட்சியத்தில் இறந்து போன புஷ்பவள்ளி தனது உடன்பிறந்த சகோதரி என்றும், அவருக்கு குழந்தை இல்லை என்றும் அதனால் தனது மூன்றாவது மகளான வாதி துர்காதேவியை தத்து கொடுத்ததாகவும் சாட்சி அளித்துள்ளார். வா.சா.2–ன் சாட்சியத்திலும், வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையிலும் வாதி தத்தெடுக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, வாதியானவர் சாந்தாராமன் – புஷ்பவள்ளி தம்பதியினரால் தத்தெடுக்கப்பட்டவர் என்று நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று தீர்வு காண்கிறேன்.

6.4) வாதியானவர் சாந்தாராமன் – புஷ்பவள்ளி தம்பதியினரால் தத்தெடுக்கப்பட்டவர் என்று நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், அது தவிர



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.29 10:27:17 +0530

வேறெந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் தீர்வு காண்கிறேன்.

7) **இறுதியாக, வாதியானவர் இறந்து போன புஷ்பவள்ளிக்கு வாரிசு என்று விளம்புகை செய்து வாதியின் வழக்கினை செலவுத்தொகையின்றி அனுமதித்து தீர்ப்பளிக்கிறேன்.**

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்ல சொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (29.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.29 10:27:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.

1. வாதித்தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திருமதி.துர்காதேவி |
| 2 | வா.சா.2 | திரு.கண்ணன் |

2. வாதி தரப்பு சான்றாணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 13.09.1999 நாளிட்ட தத்தெடுப்பு பத்திரம் அசல். |
| 2 | வா.சா.ஆ.2 | புஷ்பவள்ளி இறப்பு சான்றிதழ் உண்மை நகல். |
| 3 | வா.சா.ஆ.3 | வாரிசு சான்று கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான குறிப்பு இணையதள பதிவிறக்க நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

| | | |
|---|---|---|
| 5 | வா.சா.ஆ.5 | சாந்தாராமன் இறப்பு சான்றிதழ் சான்றளிக்கப்பட்ட நகல். |
| 6 | வா.சா.ஆ.6 | துர்காதேவி–சரவணக்குமார் திருமண அழைப்பிதழ் நாள் 28.08.2020 அசல். |

3. <u>பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u> இல்லை.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.29 10:27:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.